*සියලු ම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது*
*All Rights Reserved*

# රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව
## அரசகரும மொழிகள் திணைக்களம்
# Department of Official Languages

**රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුවෙහි II ශ්‍රේණියේ භාෂා පරිවර්තක (සිංහල/ඉංග්‍රීසි) , (දෙමළ/ඉංග්‍රීසි) , (සිංහල/දෙමළ) තනතුරු සඳහා බඳවා ගැනීමේ විවෘත/සීමිත තරග විභාගය - 2016**

**அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்), (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

**Open/Limited Competitive Examination for Recruitment to the Posts of Translator (Sinhala/English), (Tamil/English) and (Sinhala/Tamil) in the Department of Official Languages – 2016**

***දෙමළ භාෂාව / தமிழ் மொழி / Tamil Language***

| | |
|---|---|
| *කාලය: පැය 1 ½* | **මුළු ලකුණු 100** |
| நேரம் ***: 1 ½மணித்தியாலம்*** | **மொத்த புள்ளிகள் 100** |
| ***Duration: 1 ½ Hours*** | **Total Marks: 100** |

*විභාග අංකය*
*சுட்டெண்*
***Index No:……………………………...***

**සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න**
***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்***
**Answer all questions**

---

(1) **பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாத வண்ணம் கட்டுரையொன்றை எழுதுக.**

i. இலங்கையில் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏன் அவசியம்?

ii. இலங்கைக்குப் புதிய அரசியலமைப்பு ஏன் தேவைப்படுகிறது?

iii. இலங்கையின் இன்றைய நடைமுறைக்குப் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகள்

iv. இலங்கையில் மொழிபெயர்ப்பு இலங்கியங்களின் முக்கியத்துவம்

v. சுற்றுச்சூழல் தூய்மை இன்றியமையாதது

vi. இலங்கையில் தமிழ் இலக்கியத் திறனாய்வின் வளர்ச்சி

**(30 புள்ளிகள்)**

……………………………………………………………………………........................

...........................................................................…………………………………

...............................................................................................……………………………

……………………………………………………………………………………………………

…………………………………………………………………………………................

..........................................................................................................………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………….....................................

...........…………………………………………………………………………………………

……………………………………………………………………………………...............

..................................…………………………………………………………………

(2) **தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 1/3 பங்காக அமையக் கூடியவாறு சுருக்கி எழுதுக சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.**

வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்ட வள்ளுவன், இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கிய கம்பன் அறம், அரசியல், வாழ்க்கை - இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதைக் குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்ந்த இளங்கோ ஆகியோரைப் பாரதி கண்டார். இம் மூவருமே தனி ஒரு அரசனைப்பற்றியோ, தெய்வத்தைப்பற்றியோ, வள்ளலைப்பற்றியோ அல்லது குறிப்பிட்ட குலம், சாதி என்பவற்றையோ பாடினார் அல்லர். மனுக்குலம் பற்றிப் பாடினார். ''மானுடம் வென்றதம்மா'' என்றே கம்பனும் குறிப்பிட்டார். தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினாலேயே இப்பெருங் கவிஞர்கள் மானுடன் கேடின்றி வாழத்தக்க கற்பனையுலகுகளைப் படைக்க முற்பட்டனர். காலத்துக் குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள், காலத்தைக் கடந்து சிந்தித்தனர். செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராகினர். வள்ளுவன் வகுத்த அறம் அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று. மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவன் விழைந்த சமுதாயநெறியை நூலில் வடித்தான். தனது காலத்தின் அவலங்களையும், பிரச்சினைகளையும் உணர்வுபூர்வமாகவும் தெரிந்து கொள்ளும் ஒருவனே கால உணர்வுடன் செயற்பட முடியும். அவன் கூறும் முடிவுகள் பூரணமானவையாக அமையாமற் போகலாம். ஆனால் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றியவுடனேயே அவனது படைப்புக்கு தனியாற்றல் பொருந்திவிடுகின்றது. அத்தகைய ஆற்றலை அளவுகோலாகக் கொண்ட பெருங்கவிஞர்களை இனங்கண்டுகொள்கின்றோம். அந்த முறையிலேயே வள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி முதலியோர் மகாகவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

**(15 புள்ளிகள்)**

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

(3) i. "தினகரனும் தேரும் உருண்டதோ" ? இங்கு **தினகரன்** என்ற சொல்லுக்குரிய ஒத்த கருத்துச் சொல் யாது?

……………………………………………………………………………………………

ii. பிறரை வெல்ல வேண்டுமாயின் மென்மையான இன்சொற்களையே பேச வேண்டும். இங்கு **இன்சொல்** என்பதன் எதிர்கருத்துச் சொல் யாது?

……………………………………………………………………………………………

iii. சந்நியாசி உண்மை ஞானத்தை அறியும் காரணமாக கசாப்புக் கடைக்காரனை நாடியவர். இங்கு **ஞானம்** என்பதன் எதிர்ச்சொல் யாது?

……………………………………………………………………………………………

iv. கல்லூரி அதிபர் இதுவரை செய்து வந்த தில்லுமுல்லுகள் அம்பலமாகின. **தில்லுமுல்லு** என்ற இணைமொழியின் கருத்தைத் தரும் மற்றோர் இணைமொழி யாது?

………………………………………………………………………………………………...

v. பலா, தோடை என்பவற்றின் **உள்ளீட்டினது மரபுப் பெயர்** யாது?

………………………………………………………………………………………………...

vii. வரகு, தினை முதலிய தானியங்களின் **உள்ளீட்டினது மரபுப் பெயர்** யாது?

………………………………………………………………………………………………...

viii. **ஏழ்மையிலும் செம்மையாக வாழ வேண்டும்** என்னும் கருத்தினை விளக்கும் பழமொழி யாது?

…………………………………………………………………………………………………………

ix. **பின்வரும் வாக்கியங்களில் இலக்கண வழுவற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.**

(1) நீங்கள் பாடங்களைப் படித்து வாரும்.
(2) நானும் நீயும் அப்பெரியாருடன் செல்வோம்
(3) குரங்குகள் மரத்துக்கு மரம் தாவிச் சென்றது
(4) தேசிய கல்வி ஆணைக்குழு கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகளை முன்வைத்தனர்

x. **பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.**

(1) தொழில் ஸ்தாபனங்களில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
(2) தொழில் ஸ்தாபனங்களில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொல்லப்பட்டது.
(3) தொழில் ஸ்தாபனங்களில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டது.
(4) தொழில் ஸ்தாபனங்களில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்க்கொல்லப்பட்டது.

xi. ‘வெப் சையிற்’(Website) என்ற சொல்லின் தமிழ் வடிவம் யாது?

…………………………………………………………………………………………

(1x10=**10 புள்ளிகள்)**

(4) **பின்வரும் சொற்களின் பொருள் விளங்கும் வகையில் வாக்கியங்களை அமைக்கவும்**

i. பதில் நியமிப்பு

..........................................................................................................................................

..........................................................................................................................................

.........................................................................................................................................

ii. நியமனக் கடிதம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

.........................................................................................................................................

iii. தகுதிகாண் நிலை

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

iv. வினைத்திறமைகாண் தடை

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

v. மீளப் பணிக்கமர்த்துதல்

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

(2x5=**10புள்ளிகள்)**

(5) i. . **மேலெழுந்தவாரியாகக் கற்றல்** எனும் பொருள் தரும் வேறு ஒரு மரபுத்தொடர் எழுதுக.

.................................................................................................................................................

ii. **பற்றாக்குறை ஏற்படுதல்** எனும் பொருள்தரும் வேறொரு மரபுத்தொடர் எழுதுக.

.................................................................................................................................................

iii. **உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?** எனும் பழமொழியின் கருத்தைத் தரும் வேறொரு பழமொழி எழுதுக.

.................................................................................................................................................

iv. **பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு** தமிழில் ஒரு தனிச்சொல் எழுதுக.

.................................................................................................................................................

**v.** **சந்திரன் , உதயம்** என்பதைச் சேர்த்து எழுதுக.

.................................................................................................................................................

(2x5=**10 புள்ளிகள்)**

**(6) பின்வரும் பேச்சு வழக்கு வசனங்களை எழுத்து வழக்கில் எழுதுக.**

i. எனக்கு மூண்டு தங்கச்சிமார் இருக்கினம்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

ii. நாங்கள் எல்லாரும் சந்தோஷமாய் எங்களின்ரை நாட்டிலை வாழ வேண்டும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

iii. எனக்கு தமிழ் சொற்கள் கொஞ்சம் தெரியும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

iv. உங்களுக்கு தோசையும் வடையும் சாப்பிட விருப்பமா?

................................................................................................................................

................................................................................................................................

v. நீங்கள் வாறபடியால் தான் நான் அங்கை இருக்கிறன்.

................................................................................................................................

................................................................................................................................

vi. போன சனிக்கிழமை நீங்கள் எங்கை போனீங்க?

................................................................................................................................

................................................................................................................................

vii. நீங்கள் எல்லாரும் தேத்தண்ணி குடியுங்கோ.

................................................................................................................................

................................................................................................................................

viii. அம்மாவும் அப்பாவும் யாழ்ப்பாணத்திலை தான் இருக்கினம்.

................................................................................................................................

................................................................................................................................

ix. தங்கச்சி இப்ப நல்லாய் படிக்கிறா.

................................................................................................................................

................................................................................................................................

x. நான் இண்டைக்கு வேலைக்குப் போகவில்லை.

................................................................................................................................

................................................................................................................................

(10x2=**20 புள்ளிகள்**)

(7) **கீழே தரப்பட்டுள்ள பந்தியின் பிரதான கருத்தை உமது சொந்த மொழிநடையில் ஒரு வசனத்தில் அமையும்படி எழுதுக.**

அறிவியல், தொழிநுட்ப கருத்துக்களுக்கேற்பத் தோன்றிய புதிய சொற்களே கலைச்சொற்கள் எனப்படுகின்றன. கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் விரைவாக ஏற்பட்ட அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சிக்கேற்ப சமுதாயம் மாறத் தொடங்கியது. விஞ்ஞான வளர்ச்சி வேகத்தில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு உலகெங்கும் பரவின. எம்மிடையேயும் விஞ்ஞானக் கருத்துக்கள் பரவியதால் ஆங்கில மொழியில் பரவிய கலைச்சொற்களை சிலவிடத்து அவ்வாறும் சிலவிடத்து புதிய சொல்லாக ஆக்கியும் வழங்கி வருகிறோம்.

**(05 புள்ளிகள்)**

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………